2015 செப்டம்பர் 16]

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் புனித பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்கள் தங்கள் மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கு ஏதுவாக ஆற்றங்கரை மற்றும் ஆற்றுப் படுகைகளில் தங்கள் வீடுகளைக் கட்டி வாழ்ந்து வருகின்றார்கள். மழை மற்றும் வெள்ளக் காலங்களில் இவர்களது வீடுகள் பாதிப்புக்குள்ளாவதால், இவர்களுக்கு மீன் வளத் துறையின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பிலும், உள்நாட்டு மீனவ மக்கள் சார்பிலும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 272, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

272—

ஆவின் பாலகம்

***52484 திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, குறிஞ்சிபாடி ஊராட்சி ஒன்றியம், வடகுத்து ஊராட்சி, இந்திரா நகரில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று எந்நாளும் சிந்தித்து, தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்ற நோக்கோடு, துறைதோறும் முதன்மை படைத்து, பால் வளத் துறையில் இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி, தமிழகத்தின் வளமைக்காகவும், எதிர்கால சந்ததியினருக்காகவும்,*

TRUTH ALONE TRIUMPHS

உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி வெற்றி கண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

விழுப்புரம், கடலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் நெய்வேலி தொகுதிக்குட்பட்ட குறிஞ்சிபாடி ஊராட்சி ஒன்றியம், வடகுத்து ஊராட்சி, இந்திரா நகரில் ஆவின் பாலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான முகவர்களை நியமனம் செய்யும்பொருட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செப்புமொழி பதினெட்டும் சேர்ந்து போற்றும் செந்தமிழ்த் தாய், செயற்கரிய செயல்கள் யாவும் செய்து முடிக்கும் தங்கத் தாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் மலர்ப்பாதங்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-05

மாண்புமிகு அம்மாவின் ஆட்சி அற்புத ஆட்சி என்று உலகமும், நாடும், நல்லோர்களும் வாழ்த்துகின்ற வேளையில், தமிழக அரசின் சார்பில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும் என 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்து, அம்மாநாடு சிறப்புற நடத்திட வேண்டுமென 11 வெளிநாடுகளிலும், இந்தியாவில் 16 நகரங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி, திட்டமிட்டபடி செப்டம்பர் 9, 10 ஆகிய இரு நாட்களில் சென்னையில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்திக்காட்டி, ஒரு இலட்சம் கோடி ரூபாய் என்ற இலக்கைத் தாண்டி, இரு மடங்கு எனும்வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) 2,42,160 கோடி ரூபாய் முதலீட்டையும் ஈர்த்து, 4,70,065 நபர்களுக்கு வேலைவாய்ப்பையும் உருவாக்கித் தந்து, கடந்த இருபது ஆண்டுகளில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்

2015 செப்டம்பர் 16]

முதலீட்டைவிட அதிகமாகப் பெற்று சாதித்துக் காட்டியவர், வையகம் போற்றும் வரலாற்றுத் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது அன்னைத் தமிழ் மண்ணிற்குக் கிடைத்த அரசியல் அற்புதம் என்பதைப் பெருமகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, வடகுத்து ஊராட்சி, இந்திரா நகரில் ஆவின் பாலகம் அமைத்துக் கொடுக்கப்படும் எனத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ற வேளையில், இந்தப் பாலகம் விரைவாகத் தொடங்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு எப்போது வழங்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மேலும், நேற்றையதினம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், கொஞ்சிகுப்பம் அய்யனார் கோயில் மற்றும் நெய்வேலி நகரம், ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களுக்கு அன்னதானத் திட்டம் தந்து, தனது பொற்கரங்களால் துவக்கி வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய இந்திரா நகரில், திரு. என். குமார், த/பெ. நடராஜன், நெ.422,* B-1 *பிளாக், 7-வது மெயின் ரோடு, இந்திரா நகர் என்ற நபர் முகவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர்மூலம் ஆவின் பாலகம்* Petty Parlour *அமைக்கப்பட்டுள்ளது. மின்சார வாரியத்திடம் மின் இணைப்பு கோரப்பட்டுள்ளது. மின் இணைப்பு கிடைத்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் கோரிய ஆவின் பாலகம் கூடிய விரைவில் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் பாலகம் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், தருமபுரியில் புதியதாக நவீன ஆவின் பாலகம் திறக்கப்பட்டது உண்மையிலேயே பாராட்டக்கூடிய ஒரு விஷயமாகும். அருகிலே உள்ள வட்டாட்சியர் அலுவலகமானது, B.D.O. அலுவலகம், நீதிமன்றம், காவல் துறையைச் சார்ந்தோர், இப்படிப் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று சேருகின்ற ஒரு மையப் பகுதியாகவுள்ளது. எனவே, வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பு அதேபோன்று நவீன ஆவின் பாலகம் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறப்பதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் விடுதிகளில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆவின் பாலகம் இருந்தது. மூன்று ஆண்டுகாலமாக அது காணப்படவில்லை. மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆவின் பாலகம்மூலம் பால் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதேபோல் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள, Super Multi Speciality Hospital-க்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். அங்கும் ஓர் ஆவின் பாலகம் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் அரூரில் தொடங்கி சென்னை வரையில் ஆவின் பாலகம் அமைக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். நிச்சயமாக ஆய்வு செய்து

தேவை, வாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவின் பாலகம் அமைத்துத் தரப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 273, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

273—

பயணியர் மாளிகை

*40645 **திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் பயணியர் மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் பயணியர் மாளிகை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

முற்பகல் 10-10

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் நகரம் வளர்ந்து